# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 30.01.2024 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் டிசம்பர் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.740**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.741**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் டிசம்பர் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.742**

4. இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் (பொ) அவர்களின் டிசம்பர் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.743**

5. இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர்களின் டிசம்பர் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.744**

.

6. இந்நகராட்சியின் மூலம் நகரில் தினமும் சேகரிக்கப்படும் கழிவுகளில் மறுசுழற்சிக்கு உதவாத பிளாஸ்டிக் கழிவுகள் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளின் படி சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்பட்டு மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது. இப்பணிக்கு வாடகைக்கு அமர்த்தும் முறையில் லாரிகளை விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரரான M/S. Explosive Enterprises, Gobichettipalayam அவர்களிடம் லாரிகளை பெற்று ரூ. 1680 + 18% GST (டன் ஒன்றுக்கு) என்னும் ஒப்பந்த விலை விகிதத்தில் இப்பணிக்கு ஏற்கனவே ரூ.7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெற்று பிளாஸ்டிக் கழிவுகள் அனுப்பப்பட்டு அதற்கான செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரக கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் 06.01.2024 அன்று கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு வருகை புரிந்து ஆய்வு செய்து தேங்கி உள்ள பிளாஸ்டிக் கழிவுகள் அனைத்தையும் உடன் காலதாமதமின்றி சிமெண்ட் ஆலைக்கு அனுப்பபடவேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே RRC யில் சேகரித்து வைத்துள்ள பிளாஸ்டிக் கழிவுகளை உடன் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி வைத்து அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

எனவே, பொதுசுகாதாரப்பணியின் அவசியம் கருதியும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிமேற்கொள்ளும் பட்சத்தில் காலதாமதம் ஏற்படும் என்பதாலும் இப்பணிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகையுடன் கூடுதலாக ரூ.3.00 இலட்சத்திற்கு லாரிகளை விநியோகிக்கும் நிறுவனத்திடம் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் லாரிகளை பெற்று இப்பணியினை தொடரந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1152/2023/எச்1)

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 28.12.2023 தேதி முதல் பணிகளை மேற்கொண்டு வருவதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1.2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்745**

7. நகராட்சிக்கு சொந்தமான IUDP–புதிய பேருந்து நிலைய கடை எண்.23 (வரி விதிப்பு எண். 057/583) திரு.டி.பி.பாலசுப்ரமணியம் த/பெ. பெரியசாமி என்பவருக்கும், MUDF–புதிய பேருந்து நிலைய கடை எண். 08 (வரி விதிப்பு எண். 057/808) திரு.வி.வி.இளங்கோ த/பெ. வெங்கிடசுப்பிரமணியன் என்பவருக்கும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கடைகளின் குத்தகை உரிமகாலம் 31.03.2016 ம் தேதியுடன் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்ததன் பேரில், அரசாணை(நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள். 03.07.2007 ன் படி, அப்போதைய அங்காடி மதிப்பின்படி IUDP–புதிய பேருந்து நிலைய கடை எண். 23 (வரி விதிப்பு எண். 057/583) கொண்ட கடைக்கு ஏற்கெனவே இருந்த பழைய வாடகை ரூ.3,940/– மறு மதிப்பீடு செய்யப்பட்டு 01.04.2016 முதல் புதிய வாடகையாக ரூ.6,940/– எனவும், MUDF–புதிய பேருந்து நிலைய கடை எண். 08 (வரி விதிப்பு எண். 057/808) கொண்ட கடைக்கு ஏற்கெனவே இருந்த பழைய வாடகை ரூ.11,070/– மறு மதிப்பீடு செய்யப்பட்டு, 01.04.2016 முதல் புதிய வாடகையாக ரூ.14,000/– எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி மேற்படி இரண்டு கடை குத்தகை உரிமதாரர்களும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட வாடகையினை எதிர்த்து, கோபிசெட்டிபாளையம் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு எண். OS No.67/2018 ன் படி வழக்கு தொடர்ந்திருந்தனர். மேற்படி வழக்கில் மனுதாரர்கள் ஆஜராகாத காரணத்தினால், கடந்த 22.12.2022 ம் தேதியில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. (தீர்ப்பாணை பெறப்பட்ட நாள். 27.12.2023). வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளதால், மேற்படி இரண்டு கடை குத்தகை உரிமதாரர்களுக்கும் மார்ச் 2024 மாதம் முடிய நிலுவை வாடகை செலுத்தக்கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.4,000/– வழங்கக்கோரி, நகர்மன்ற வழக்கறிஞர் திரு.யு.கே.காணிவேலுச்சாமி அவர்கள் தனது 27.12..2023 ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். எனவே நகர்மன்ற வழக்கறிஞர் திரு.யு.கே.காணிவேலுச்சாமி அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.4,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1140/2017/அ3)

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.746**

8. இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (MLA Fund) 2023-24–ல் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 03.01.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.1 கிருஷ்ணா நகரில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 4,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.35 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | **1.13** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 2. | வார்டு எண்.2 ராமர் எக்ஸ்டன்சன் –6 இல் மழைநீர் வடிகால் கட்டுதல் | 3,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 1.04 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 3. | வார்டு எண்.3 சின்னச்சாமி 3 வது வீதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 3,00,000 | **M/s.D N கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.08 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.50 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 4. | வார்டு எண்.4 பாட்டப்பன் வீதி பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 3,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.08 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 1.29 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 5. | வார்டு எண்.5 கோசலை நகரில் சிறுபாலம் அமைத்தல் | 2,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.28 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | **1.14** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 6. | வார்டு எண்.6 ராமர் எக்ஸ்டன்சன் 2 இல் மழைநீர் வடிகால் கட்டுதல் | 3,00,000 | **திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர்.** | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.16 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 7. | வார்டு எண்.7 திருவேங்கடம் வீதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 3,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு. |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர். | 1.19 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 8. | வார்டு எண்.08 மங்கம்மா வீதி LIG காலனி சிறுபாலம் அமைத்தல் மற்றும் புதிய ஆஸ்பத்திரி வீதியில் சிறுபாலம் கட்டுதல் | 3,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.38 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.03 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 9. | வார்டு எண்.9 மாருதி நகரில் சிறுபாலம் , காந்தி நகர் 1 வது வீதியில் சிறுபாலம் அமைத்தல் | 3,00,000 | **M/s.D N கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.37 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.53 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 10. | வார்டு எண்.10 மின் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 3,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர். | 1.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 11. | வார்டு எண்.11 திரு நகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் | 3,00,000 | **M/s.D N கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.23 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.41 **சதவீதம்** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 12. | வார்டு எண்.12 வெங்கட்ராமன் வீதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 3,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.07 **சதவீதம்** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.16 **சதவீதம்** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 13. | வார்டு எண்.13 அரசமரம் விநாயகர் கோயில் அருகில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து குடிநீர் வழங்குதல் | 3,00,000 | **M/s.D N கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.20 **சதவீதம்** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.55 **சதவீதம்** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 14. | வார்டு எண்.14 கிருஷ்ணன் வீதி , கிட்டாசாமி வீதி சந்திப்பில் உள்ள பொது கிணறு தூர் வாரி தொட்டி அமைத்து கிட்டாசாமி வீதி , டூரி சுப்பிரமணியம் முதல் கிருஷ்ணா நகர் சந்து வரை குழாய் நீட்டிப்பு செய்தல் | 3,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.10 **சதவீதம்** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.47 **சதவீதம்** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 15. | வார்டு எண்.15 வாஸ்து நகர் பகுதியில் பூங்கா பராமரித்தல் | 3,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.06 **சதவீதம்** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.17 **சதவீதம்** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

**ந.க.எண். 143/2023 /இ1**

**அலுவலகக்குறிப்பு :-**

**அ)** .மன்றம் அனுமதிக்கலாம் .

ஆ).1 . மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு .V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. வ.எண்.–2–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .
3. வ.எண்–3–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.D N கன்ஸ்ட்ரக்சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
4. வ.எண்.4 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

5. வ.எண்.5 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
6. வ.எண்.6 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு .K.R.ஆறுமுகம்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
7. வ.எண்.7 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
8. வ.எண்-8 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்
9. வ.எண்-9 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.D N கன்ஸ்ட்ரக்சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .
10. வ.எண்.10 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
11. வ.எண்-11 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.D N கன்ஸ்ட்ரக்சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்
12. வ.எண்.12 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
13. வ.எண்.13க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.D N கன்ஸ்ட்ரக்சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
14. வ.எண்.14 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
15. வ.எண்-15 க்கு கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு அ) அனுமதிக்கப்பட்டது**
**ஆ). 1 முதல் 15 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்றத்தீர்மான எண்.747**

9. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.2, ராமர் எக்ஸ்டென்சன் பகுதியில் உள்ள நுண் உரசெயலாக்க மையத்தின் வடக்கு பகுதியில் மண் திட்டுகளையும், செடிகொடி புதர்களையும் சுத்தம் செய்து சமன் செய்ய நகராட்சி நிர்வாக கண்காணிப்பு பொறியாளர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் 06.01.2024 –ம் தேதிய கள ஆய்வில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளை சமன் செய்ய இந்நகராட்சிக்கு சொந்தமாக JCB வாகனம் இல்லாததால், வாடகை அடிப்படையில் JCB வாகனத்தை வெளிப்பணி முறையில் வாடகைக்கு எடுத்து பணியினை மேற்க்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 0044/2023/எச்1)

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.748**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தை வணிக வளாக IUDM கடைகளுக்கு 12.01.2024 ஆம் தேதியன்று ஆறாவது முறையாக முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடை பெற்ற கடைகள் :

1. தினசரி சந்தை IUDM கடை எண். A.03, A.05, A.06, A.08, A.11, A.17, A.19, A.20, A.21, A1/1, A15/1, G.1 மற்றும் கடை எண். G.2 (13 கடைகள்)

மேற்படி 13 கடைகளுக்கு நடைபெற்ற முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. மூன்று கடைகளுக்கு மட்டும் தலா இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். விபரம் பின்வருமாறு.

| வ.எண் | கடையின் விபரம் | ஏலத்தில் கலந்து கொண்டவர் விபரம் | ஏலத்தொகை |
|---|---|---|---|
| 1 | தினசரி சந்தை IUDM கடை எண். **A1/1** | திரு.என்.எஸ்.சம்சுதீன்<br>த/பெ. சர்புதீன்,<br>11/3, திரு.வி.க.வீதி,<br>நல்லகவுண்டம்பாளையம்,<br>கோபிசெட்டிபாளையம்<br>98427 88556 | ரூ.15,100/- |
| | | திரு.ஏ.முகமது முஸ்தபா<br>த/பெ. அப்துல் பஷீர்,<br>19, காந்தி வீதி,<br>நல்லகவுண்டம்பாளையம்,<br>கோபிசெட்டிபாளையம் | **ரூ.15,200/-** |
| 2 | தினசரி சந்தை IUDM கடை எண். **A15/1** | திரு.வி.குமாரராஜா<br>த/பெ. ஜி.பி.வெங்கிடு,<br>256, காமராஜ் நகர்,<br>அவினாசி 641654 | **ரூ.15,200/-** |
| | | திரு.டி,தேவராஜ்<br>த/பெ. தம்புசாமி,<br>17, ஜே.ஜே நகர்,<br>கோபிசெட்டிபாளையம்<br>98429 48088 | ரூ.15,100/- |
| 3 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.21** | திருமதி.எஸ்.காந்திமதி<br>க/பெ. சரவணன்,<br>27ஏ, பிள்ளையார் கோயில் வீதி,<br>கெம்பநாய்க்கன்பாளையம்,<br>98429 44769 | **ரூ.15,300/-** |
| | | திரு.ஆர்.தீபன்குமார்<br>த/பெ. ராஜேந்திரன்,<br>4/71, தண்ணீர்பந்தல்பாளையம்,<br>உப்பிலிபாளையம், அவினாசி,<br>96291 59789 | ரூ.15,100/- |

மேற்கண்ட விபரங்களின் படி,

வரிசை எண். 1 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A1/1 க்கு திரு.என்.எஸ்.சம்சுதீன் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/-ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, திரு.ஏ.முகமது முஸ்தபா என்பவர் ரூ.15,200/-க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 2 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A15/1 க்கு திரு.டி.தேவராஜ் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/-ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, திரு.வி.குமாரராஜா என்பவர் ரூ.15,200/-க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 3 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.21 க்கு திருமதி.ஆர்.தீபன்குமார் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,200/-ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, திருமதி.எஸ்.காந்திமதி என்பவர் ரூ.15,300/-க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 18.01.2024 ஆம் தேதிய குறிப்பில், தினசரி சந்தை IUDM கடை எண்கள். A1/1, A15/1 மற்றும் A.21 ஆகிய மூன்று கடைகளுக்கு உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரியுள்ள நபர்களுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று, கட்டுமான பணிகள் முடிவடைந்தபின் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் என தெரிவித்துள்ளார். எனவே வருவாய் ஆய்வர் அவர்கள் குறிப்பின்படி,

1. தினசரி சந்தை IUDM கடை எண். A1/1 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/- கோரியுள்ள திரு.ஏ.முகமது முஸ்தபா என்பவருக்கும்,
2. தினசரி சந்தை IUDM கடை எண். A15/1 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/- கோரியுள்ள திரு.வி.குமாரராஜா என்பவருக்கும்,
3. தினசரி சந்தை IUDM கடை எண். A21 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,300/- கோரியுள்ள திருமதி.எஸ்.காந்திமதி என்பவருக்கும்,

புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி வணிக வளாக கட்டுமான பணிகள் முடிவடைந்தபின், ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம் போகாத மீதமுள்ள 10 கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1272/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.749**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பள்ளிகளில் மாணவ மாணவியர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு RO Plant அமைக்கப்பட்டுள்ளது.

1. வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளி -250 LPH
2. நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி - 250 LPH
3. நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி-250 LPH
4. நகராட்சி மேல்நிலைப்பள்ளி மொடச்சூர் -250 LPH

மேற்படி பள்ளிகளில் சுத்திகரிப்பு கருவி (RO Plant) அமைக்கப்பட்டு ஆறு ஆண்டுகளுக்கு மேலாகிறது. எனவே அடிக்கடி பழுது ஏற்படுவதால், மாணவ மாணவிகளுக்கு தடையின்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு சிரமம் ஏற்படுகிறது.

மேற்படி பள்ளிகளில் உள்ள சுத்திகரிப்பு கருவிகள் (RO Plant) தனியார் சேவை மூலம் வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளது. 2024-2025 ஆம் ஆண்டுக்கு பராமரிப்பு செலவு தொகை ரூ.1,25,000/- ற்கு மற்றும் அதன் உதிரிபாகம் மதிப்பீட்டு விலை விகிதத்தில்

அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் சரிசெய்து கொள்ளவும் ஆகும் செலவு தொகை.ரூ.1,75,000/–க்கு ஆக மொத்தம் ரூ.3,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு அவசியம் கருதி 2023 –2024 ஆம் ஆண்டு பாரமரிப்பு செய்து வந்த திருவாளர்.மாருதி இன்ஜினியரிங் ஒப்பந்ததாரரை கொண்டு 2023–2024 மதிப்பீட்டு விலை விகிதத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்ததின் பேரில், மேற்படி ஒப்பந்ததாரரை கொண்டு பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. திருவாளர். மாருதி இன்ஜினியரிங் ஒப்பந்ததாரரை கொண்டு பணி மேற்கொள்ளவும் மேற்கண்ட செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.750**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல், நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே தினமும் 37 பணியாளர்களை (DBC Workers) வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/s. TRUSTUS OUT SOURCING SOLUTIONS PVT LTD, Plot No. 117, D.No. 2, 28 th Street, Balaji Nagar, Puzhuthivakkam, Chennai – 600 091 அவர்களிடம் பெற்று நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி பணியின் ஒப்பந்த காலம் 30.01.2024 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s. TRUSTUS OUT SOURCING SOLUTIONS PVT LTD, Plot No. 117, D.No. 2, 28 th Street, Balaji Nagar, Puzhuthivakkam, Chennai – 600 091 அவர்களின் 19.01.2024 ஆம் நாளிட்ட கடிதத்தில் 30.01.2024 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.570/– என்னும் விலை விகிதத்திலேயே தொடர்ந்து 31.01.2024 முதல் 90 வேலை நாட்களுக்கு பணியாளர்களை தொடர்ந்து வழங்க சம்மதம் தெரிவித்து ஒப்பந்த காலத்தினை கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட கொசு புழு ஒழிப்பு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 31.01.2024 முதல் 90 வேலை நாட்களுக்கு நிர்வாக நலன் கருதி காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.570/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 37 DBC பணியாளர்களை பெற்று தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.18.98/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1829/2023/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.751**

13. அரசாணை (நிலை) எண். 252, வேளாண்மை (வே.வி.3) துறை நாள். 21.11.2023 ன் படி, உள்ளாட்சி அமைப்புக்கு சொந்தமான இடங்களில் செயல்படும் உழவர் சந்தைகளுக்கு சலுகை அடிப்படையில் நகராட்சிப் பகுதிகளுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.15,000/− உழவர் சந்தை ஒப்படைக்கப்பட்ட நாள் முதல், முன்தேதியிட்டு வாடகை நிர்ணயம் செய்து வசூல் செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் உள்ள உழவர் சந்தைக்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்கு 2000−2001 ம் ஆண்டு முதல் (13.10.2000 முதல் 12.10.2001 வரை) முதல் ஆண்டொன்றிற்கு ரூ.10,59,109/− என நிர்ணயம் செய்யப்பட்டு நடப்பு 2023−2024ம் ஆண்டு (13.10.2023 முதல் 12.10.2024 வரை) வரை குத்தகை தொகை ரூ.4,36,14,593/− செலுத்தப்படவேண்டியுள்ளது.

வருவாய் ஆய்வர் தனது 19.01.2024 ம் தேதிய குறிப்பில் வாரச்சந்தையில் உள்ள உழவர் சந்தைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்திற்கு மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ளவாறு மன்றத்தின் அனுமதி பெற்று 2000−2001 ம் ஆண்டு முதல் (13.10.2000 முதல் 12.10.2001 வரை) ஆண்டொன்றிற்கு வாடகை தொகை ரூ.15,000/− என முன் தேதியிட்டு நிர்ணயம் செய்து நடப்பு 2023−2024ம் ஆண்டு வரை (13.10.2023 முதல் 12.10.2024 வரை) 24 ஆண்டுகளுக்கு ரூ.3,60,000/− கேட்பு நிர்ணயம் செய்து வசூல் செய்யலாம் எனவும், மேற்படி உழவர் சந்தைக்கு ஏற்கெனவே 2000−2001 ம் ஆண்டு முதல் (13.10.2000 முதல் 12.10.2001 வரை) முதல் ஆண்டொன்றிற்கு ரூ.10,59,109/− என நிர்ணயம் செய்யப்பட்டு நடப்பு 2023−2024ம் ஆண்டு (13.10.2023 முதல் 12.10.2024 வரை) வரை செலுத்தப்படவேண்டிய குத்தகை நிலுவை தொகை ரூ.4,36,14,593/− ஐ மன்றத்தின் அனுமதி பெற்று தள்ளுபடி செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படியும், மேற்காணும் அரசாணையின் படியும்,

1. வாரச்சந்தையில் உள்ள உழவர் சந்தைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்திற்கு சலுகை அடிப்படையில் உழவர் சந்தை ஒப்படைக்கப்பட்ட, 2000−2001 ம் ஆண்டு முதல் (13.10.2000 முதல் 12.10.2001 வரை) ஆண்டொன்றிற்கு வாடகை தொகை ரூ.15,000/− என முன் தேதியிட்டு நிர்ணயம் செய்து, நடப்பு 2023−2024ம் ஆண்டு வரை (13.10.2023 முதல் 12.10.2024 வரை) 24 ஆண்டுகளுக்கு ரூ.3,60,000/− கேட்பு நிர்ணயம் செய்து வசூல் செய்யவும்,
2. மேற்படி உழவர் சந்தைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்திற்கு ஏற்கெனவே 2000−2001 ம் ஆண்டு முதல் (13.10.2000 முதல் 12.10.2001 வரை) முதல் ஆண்டொன்றிற்கு ரூ.10,59,109/− என நிர்ணயம் செய்யப்பட்டு, நடப்பு 2023−2024ம் ஆண்டு (13.10.2023 முதல் 12.10.2024 வரை) வரை செலுத்தப்படவேண்டிய குத்தகை நிலுவை தொகை ரூ.4,36,14,593/− ஐ குத்தகை கேட்பிலிருந்து தள்ளுபடி செய்யவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1391/2000/அ3)

**அலுவலகக்குறிப்பு :**

அரசாணை (நிலை) எண். 252, வேளாண்மை (வே.வி.3) துறை நாள். 21.11.2023 ல் அனுமதிக்கப்பட்டுள்ளதின்படி

1. உழவர் சந்தைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்திற்கு ஆண்டு வாடகை ரூ.15,000/− என 13.10.2000 முதல் நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. உழவர் சந்தைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்திற்கு 2000−2001 ம் ஆண்டு முதல் (13.10.2000 முதல் 12.10.2001 வரை) 2023−2024 ம் ஆண்டு வரை (13.10.2023 முதல் 12.10.2024 வரை)

செலுத்தப்படவேண்டிய நிலுவை குத்தகை தொகை ரூ.4,36,14,593/- ஐ குத்தகை கேட்பிலிருந்து தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.752**

14. அரசாணை (நிலை) எண். 252, வேளாண்மை (வே.வி.3) துறை நாள். 21.11.2023 ன் படி, உள்ளாட்சி அமைப்புக்கு சொந்தமான இடங்களில் செயல்படும் உழவர் சந்தைகளுக்கு சலுகை அடிப்படையில் நகராட்சிப் பகுதிகளுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.15,000/- உழவர் சந்தை ஒப்படைக்கப்பட்ட நாள் முதல், முன்தேதியிட்டு வாடகை நிர்ணயம் செய்து வசூல் செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு நகராட்சிப் பகுதிகளில் செயல்படும் உழவர் சந்தைகளுக்கு ஆண்டு வாடகை ரூ.15,000/- என நிர்ணயம் செய்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண். 252, வேளாண்மை (வே.வி.3) துறை நாள். 21.11.2023 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1391/2000/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.
**பதிவு செய்யப்பட்டது , மன்றத்தீர்மான எண்.753**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023 இன் கீழ் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அறிவுசார் மையம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை G.O.(MS).No.88 நாள்.17.06.2022 படி நிர்வாக அனுமதியும் தலைமை பொறியாளர் அவர்களது தொழில்நுட்ப அனுமதி செயல்முறை ஆணை ந.க.எண்.001/2022/Do1 நாள். 24.06.2022 தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு 15.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 29.07.2022 அன்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Qun Interiors Pvt Ltd அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் நடைபெற்று வந்தது. இந்நிலையில் மேற்படி பணியை 29.07.2023 க்குள் முடிக்க வேண்டும் என வேலை உத்திரவில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் கட்டிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு 18 மாதங்கள் ஆகியும் முழுமையாக பணி முடிக்காத காரணத்தால் மேற்படி பணியினை விரைவில் முடிக்க ஒப்பந்ததராரக்கு பலமுறை அறிவிப்பு வழங்கியும் இதுநாள் வரை பணியினை முழுமையாக முடிக்கப்படவில்லை. அதனால் இவ்வலுவலக அறிவிப்பு கடித வாயிலாக ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள கட்டுமான பணிக்கு கீழ்கண்டவாறு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

**பணியின் விவரம் :**

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை.ரூ.இலட்சத்தில்** |
|---|---|---|
| 1 | Construction of New Knowledge center and Study center at Municipal Town Middle School in Gobichettipalayam Municipality. | 112.00 |

எனவே மேற்கண்ட பணிகளுக்கு உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று பணிகள் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்ற ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்ததை மன்றம் அனுமதிக்கலாம் .
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திருத்திய தொழில்நுட்ப அனுமதி பெற்று பணி மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் .

**அலுவலக குறிப்பு 1,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.754**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் பொது மக்களின் அன்றாட தேவைகளுக்கு 250 எண்ணிக்கை சிறு மின் விசை மின் மோட்டார்கள் இயக்கப்படுகிறது.. இவைகள் வார்டு 1 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் அல்லாத பிற உபயோக பயன்பாட்டிற்கு இயக்கப்படுகிறது. 1.00HP முதல் 5.00 HP வரை சப்மெர்சிபில் ஆழ்குழாய் கிணறு மின் மோட்டார் இயக்கப்படுகிறது.

இவைகளில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள், மின்மோட்டார்களில் ரீவைண்டிங் செய்தல் , பம்பு உதிரி பாகங்கள் பொருத்துதல் ஸ்டாட்டரில் ஏற்படும் பழுதுகள், மின் உபகரணங்கள் பொருத்துதல் புதிய கேபிள் பொருத்துதல் ஆகிய பணிகள் அவ்வப்பொழுது சரிசெய்து இயக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணிகள் 2024–2025 அம் ஆண்டு 6 மாதத்திற்கு (ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை ) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ.4.75 இலட்சத்திற்கு ஏற்கனவே செய்து கொண்டிருந்த M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் கோபிசெட்டிபாளையம் , அவர்கள் 2023–2024 ல் உள்ள மதிப்பீடு தொகையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பு கொண்டதால் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. (ந.க.எண்.673/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணிக்கான செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.755**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் 10 குடிநீர் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகரில் உள்ள 10 மேல்நிலை தொட்டிக்கு தண்ணீர் ஏற்ற குடிநீர் உந்து குழாய் 17.99 கி.மீட்டர் நீளத்திற்கும் , நகரில் 130.00 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோகம் குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சி பகுதியில் 30 வார்டுகளிலும் 94 சுவீஸ் வால்வுகள் மூலம் அனைத்து பகுதிக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட குடிநீர் விநியோக பணிக்கு 16 நபர்களை கொண்டு குடிநீர் விநியோக பாரமரிப்பு பணிகளை வெளிமுகமை முறை (Outsourcing ) மூலம் நகர்மன்ற தீர்மானம் எண்.571 நாள்.25.07.2023 அனுமதி பெற்று திருவாளர். LD MAN POWER SOLUTIONS Vellore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி (17.11.2023) அன்று பெற்று 20.11.2023 இல் பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. (2 மாதங்களுக்கு)

மேற்படி ஒப்பந்தகாலம் 31.01.2024 தேதி உடன் முடிவடைகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதி மேலும் ஐந்து மாதங்களுக்கு வெளி முகமை முறை மூலம் குடிநீர் பாராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், தற்போது 16 நபர்களை கொண்டு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்துவது போதுமானதாக இல்லாததால் கூடுதலாக 2 நபர்கள் மொத்தம் 18 நபர்கள் அமர்த்தி கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் இப்பணிக்கு 18 நபர்களுக்கு ஐந்து மாதங்களுக்கு மதிப்பீட்டு தொகை .ரூ.17,30,000/–க்கும், தற்போது பாராளுமன்ற உறுப்பினர் தேர்தலை முன்னிட்டும் , கோடைகாலங்களின் வறட்சியை கருத்தில் கொண்டு ஏற்கனவே , பணி உத்திரவின் படி தினக்கூலி நபர்கள் வழங்கி வருகின்ற திருவாளர்.LD MAN POWER SOLUTION அவர்கள் ஏற்கனவே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் மேலும் ஐந்து மாதங்களுக்கு சப்ளை செய்ய இசைவு தெரிவித்துள்ளார்.

எனவே , மேற்படி ஐந்து மாதத்திற்கான செலவு தொகை.ரூ.17,30,000/- குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும், திருவாளர்.LD MAN POWER SOLUTION அவர்களின் ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2376/2023/சி1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. திருவாளர். LD MAN POWER SOLUTION ஒப்பந்ததாரரை கொண்டு பணி மேற்கொள்ளவும் மேற்காண் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.756**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 2022–2023 இன் படி கீழ்கண்ட பணியினை செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை 19002/2022/SBM–1 நாள். 25.11.2022 படி நிர்வாக அனுமதியும் தலைமை பொறியாளர் அவர்களது செயல்முறை ஆணை ந.க.எண்.001/2022/Do1 நாள். 19.12.2022 படி தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு 06.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 11.01.2023 அன்று வேலை M/s.ORIENT BUILDERS PRIVATE LIMITED அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் நடைபெற்று வந்தது. இந்நிலையில் மேற்படி பணியை 30.07.2023 க்குள் முடிக்க வேண்டும் என வேலை உத்திரவில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி பணியினை விரைவில் முடிக்க ஒப்பந்ததாராக்கு பலமுறை அறிவிப்பு தெரிவித்தும் இதுநாள் வரை பணியினை முழுமையாக முடிக்கப்படவில்லை. எனவே இவ்வலுவலக அறிவிப்பு கடித வாயிலாக ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே மொத்தம் 15570 MT குப்பையில் அண்ணா பல்கலைக்கழகம் அறிக்கையின் படி 10305.60 MT மட்டுமே அகற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 5264.40 MT குப்பைகளை அகற்றி தர ரூ.49.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது .

**பணியின் விவரம் :**

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை.ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | Reclamation of existing dump yard at Karatoor Compost Yard by removing the Legacy waste Below Ground Level in Gobichettipalayam Municipality | 49.00 |

எனவே மேற்கண்ட பணிக்கு உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று பணிகள் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்ற ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்தததை மன்றம் அனுமதிக்கலாம் .

3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திருத்திய தொழில்நுட்ப அனுமதி பெற்று பணி மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் .

**அலுவலக குறிப்பு 1,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.757**

19. இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள 'தமிழ் வாழ்க' போர்டில் நியான் பால்புகள் பொருத்தப்பட்டு உள்ளது. அதன் இரண்டு பல்புகள் பழுதடைந்து எரியாமல் உள்ளது.மேற்படி போர்டில் உள்ள இரண்டு பல்புகளை மாற்றி எரிய விடுவதற்கு ரூ.5900/– ஆகும். பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.129/2024/இ1)

**அலுவலககுறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணிக்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.758**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளி கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிகள் M/s. TRUSTUS OUT SOURCING SOLUTIONS PVT LTD, Plot No. 117, D.No. 2, 28 th Street, Balaji Nagar, Puzhuthivakkam, Chennai – 600 091 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 12.03.2024 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s. TRUSTUS OUT SOURCING SOLUTIONS PVT LTD, Plot No. 117, D.No. 2, 28 th Street, Balaji Nagar, Puzhuthivakkam, Chennai – 600 091 அவர்களின் 19.01.2024 ஆம் நாளிட்ட கடித்தில் 12.03.2024 ஆம் தேதியுடன் முடிவடையும் 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.631/– என்னும் விலைவிகிதத்திலேயே தொடர்ந்து பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட 9 நகராட்சி பள்ளிகளின் தூய்மைப் பணிகளில் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பள்ளி மாணவர்களின் பொது சுகாதார நலன் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 12.03.2024 முதல் 90 பள்ளி வேலை நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 631/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.10.79 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1830/2023/எச் 1)

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.759**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் குடிநீர் விநியோக அமைப்பில் 10 எண்கள் குடிநீர் மேல்நிலை தொட்டிகள் உள்ளன. தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அனைத்து மேல்நிலைத் தொட்டிக்கு செல்லும் வகையில் 17.93 கி.மீ உந்து குழாய் அமைக்கபட்டுள்ளது மற்றும் அனைத்து தெருக்களில் 130.50 கி.மீ குடிநீர் விநியோக குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 13380 வீட்டு குடிநீர் குழாய்கள் 277 எண்கள் ஆழ்துளை கிணறுகளும் உள்ளது.

மேற்படி குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகளையும் மேல்நிலை தொட்டிகள் பராமரிப்பு பணிகளையும் மேற்கொள்ள அதற்கான பணியாளர்கள் எவரும் இல்லை, ஆதலால் இந்நகராட்சி எல்லைக்குள் குடிநீர் விநியோகம் பணிகள் 100 சதவீதம் மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டு மிகுந்த சிரமத்திற்கிடையே இப்பணியை தற்போது தனியார் சேவையை பயன்படுத்தி மேற்கோள்ளப்பட்டு வருகிறது.

எனவே , இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோக குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் கசிவுகள் மற்றும் வெடிப்புகள் , குழாய் மாற்று பணிகள் அத்தியாவசிய பணியாக கருதி பராமரிக்க தனியார் வேவையை பயன்படுத்தி பணிகள் மேற்கொள்ள (01.04.2024 முதல் 30.09.2024) 2024-2025 ம் ஆண்டு ஆறு மாதங்களுக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை. ரூ.4,50,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் பாரளுமன்ற தேர்தலை எதிர்நோக்கி பணியின் அவசியம் கருதியும் கோடைகாலத்தை கருத்தில் கொண்டு 2023-2024 ஆண்டு பராமரிப்பு பணி செய்து வந்த திருவாளர். ஸ்ரீ.சரவணன்&கோ ஒப்பந்ததாரரை கொண்டு 2023-24 மதிப்பீடு விலை விகிதத்தில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்ததின் பேரில் மேற்படி ஒப்பந்ததாரரை கொண்1டு பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. திருவாளர். ஸ்ரீ.சரவணன்&கோ ஒப்பந்ததாரரை கொண்டு பணி மேற்கொள்ளவும் மேற்காண் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.760**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28 வீட்டு வசதி வாரியத்தில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் டேங்க் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.60,000/–ஐ நகராட்சி குடிநீர் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.761**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தையில் சுங்க வரி வசூலிக்க நுழைவு வாயில் மற்றும் காவலர் அறை பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் பழுதுகளை சீர்செய்யவும் வாரச்சந்தையை சமன் செய்து கொடுக்கவும் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கோரி குத்தகைதாரர்கள் மனு கொடுத்துள்ளனர். வருவாய் ஆய்வாளர் குறிப்பின படி பணி மேற்கொள்ள

மதிப்பீட்டு செலவினம் ரூ.3,40,000 /– ஐ நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

**அலுவலககுறிப்பு :**

1. மன்றம் அனமதிக்கலாம் .
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.762**

24. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை.ரூ. |
|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21 பேருந்து நிலையம் பின்புறம் கால்வாய் உடைந்து கழிவு நீர் சாலை வழியாக செல்வதால் பொது மக்களுக்கு இடையூராக உள்ளது. அதனால் சாலையின் குறுக்கே சிறுபாலம் அமைத்தல் | 60,000 |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அறைகளுக்கு கண்ணாடி அமைத்தல் மற்றும் UPVC கதவு அமைத்தல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்தல் | 50,000 |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் முன்புறம் வடிகால் சரிசெய்தல் , தரை ஓடுகள் பதித்தல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்தல் | 60,000 |
| 4 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03 மல்லிகை நகரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சுகாதார பிரிவின் தேவையின் படி கட்டிடம் இடிக்கப்பட்ட பொருட்கள் (C&D Waste) சேகரிப்பதற்காக பூங்கா சுற்றி கம்பி வேலி அமைத்தல் | 65,000 |
| | மொத்தம் | 2,35,000 |

**அலுவலககுறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.763**

25. சேதிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் மொடச்சூர் வாரச்சந்தையில் கட்டப்பட்டுள்ள வீடற்றவர்களுக்கான தங்கும் விடுதி கடந்த ஓராண்டாக M/s Atchayam Trust, Erode என்னும் அமைப்பினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி அமைப்பிற்கு வழங்கப்பட்ட அனுமதி காலம் வரும் 31.01.2024 ம் தேதியுடன் முடிவடைகிறது. நிர்வாக நலன் கருதி மேற்காண் விடுதியின் பராமரிப்பு பணியினை 01.02.2024 முதல் ஓராண்டு காலத்திற்கு M/s Atchayam Trust, Erode அவர்களுக்கு ஒப்படைத்து விடுதியினை பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1508/2021/எச்1)

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.764**

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குப்பட்ட மொடச்சூர் கிராமம், வார்டு C , பிளாக் 15 , நகரளவை எண்.17/2, ரீ.சர்வே எண். 69A, 71B இல் அமையும் 0.4665 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவாக அமைக்க உத்தேச சாலைகள் பரப்பு மற்றும் பொது உபயோக பரப்பு ஆகியவற்றினை உள்ளாட்சிக்கும் TANGEDCO விற்கும் உரிய இடத்தினை மின்சார வாரியத்திற்கு அல்லது உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யுமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.4336/2021/ஈமா2 நாள்.13.12.2021 இல் திரு.எம்.பி.சரவணன் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு இவ்வலுவலகத்திற்கு நகல் வரப்பெற்றது.

இதனையடுத்து மனுதாரருக்கு மேற்படி மனைப்பிரிவிற்கான உத்தேச சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை ஆணையர் பெயரில் தானப்பத்திரம் மூலம் பத்திர அலுவலகத்தில் பதிவு செய்து கொடுக்குமாறு 05.04.2022 இல் மனுதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் கடிதம் ந.க.எண்.4336/2021/ஈமா2 நாள்.01.04.2022 இல் மா.வ/ஈ.மா எண்.97/2022 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.266/2022/எப்1 நாள்.27.07.2022 மற்றும் 02.09.2022 இல் ஆவணங்கள் கோரி மனுதாரராகிய சரவணனுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. இந்நிலையில் மனுதாரராகிய திரு.எம்.பி.சரவணன் இவ்வலுவலகத்தில் அறிவிப்பில் கோரிய ஆவணங்களை சமர்பிக்க கால அவகாசம் வழங்குமாறு 17.09.2022 மற்றும் 21.01.2023 ஆம் நாளிட்ட விண்ணப்பத்தில் கோரப்பட்டது.

மேலும், இதனை அடுத்து இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண்.266/2022/எப்1 நாள்.01.02.2023 இல் ஆவணங்கள் கோரி நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டது. இதன் பின்னர் மனுதாரர் 14.02.2023 ஆம் நாளிட்ட விண்ணப்பத்தில் இவ்வலுவலகத்தால் கோரப்பட்ட ஆவணங்களை சமர்பித்துள்ளார். அத்துடன் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை ஆவண எண்.581/2022 நாள்.15.02.2022 இன் படி நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது.

மேற்காணும் மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து கீழ்காணும் விபரப்படி 23.01.2024 ஆம் நாளிட்ட பொறியியர் பிரிவு குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. அங்கீரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறு சாலைகளின் இருபுறம் (using 20mm Blue metal) ( M20 concrete) தடுப்பு சுவர் அமைத்து அதன் மழை நீர் செல்லும் பாதையில் எவ்விதத்திலும் மழை நீர் தேங்காதவாறு உட்புறத்தில் சிமெண்ட பூச்சு செய்து (Disposal Point) உடன் மழை நீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.

2. அங்கீரிக்கப்பட்ட வரைப்படத்தில் உள்ள சாலை அமைப்பின் படி 9.00 மீ அகல தென்வடல் ரோடு மண் நிரப்பி GSB 20 Cm & WMM 15Cm) அமைத்து DBM 5 Cm மற்றும் BC 3 Cm அமைத்து போடப்பட்ட சாலையில் மழைநீர் வடிகால் வரை (End to End) தார்சாலை அமைக்கப்பட்டு நகராட்சி சாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

3. அங்கீரிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின் படி மூலை முடுக்குகள் அமைக்கப்பட்டு , மூலை முடுக்குகளுக்கு இடையூறு செய்யாத வண்ணம் மழை நீர் வடிகால் , சிறுபாலங்கள் இடங்களில் தண்ணீர் தேங்கா வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

4. அங்கீரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறு சாலைகளில் 110 m HDPE Pipe தரமான குடிநீர் குழாய் பதிக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது

5. நகராட்சிக்கு சொந்தமான பொது இடம் பாதுகாப்பு முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

6. வரைபடத்தில் உள்ளவாறு மின் கம்பங்கள் அமைத்து தெரு விளக்குகள் அமைக்க மின் வாரியத்திற்கு தொகை செலுத்தப்பட்டு மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளது. LED விளக்குகள் மட்டும் பொருத்தப்பட வேண்டும்.

7. மேலும் இப்பணிக்கு ஈரோடு அரசு பொறியியல் கல்லூரி அவர்களின் கடிதம் IRTT/CE35/2022-2023/Test No.35/198 நாள்.05.05.2023 இன் படி மூன்றாம் நபர் தரச்சான்று பெறப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு பொறியியர் பிரிவில் சான்றளிக்கப்பட்டதில் குறிப்பிட்டவாறு மேற்படி மனைப்பிரிவு இடத்தில் பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடத்தில் முள் வேலி அமைத்து நகராட்சிக்கு சொந்தமான இடம் என பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் மேற்படி மனைப்பிரிவில் பிரிக்கப்பட்ட மனையிடங்கள் அனைத்திற்கும் தனித்தனியாக உட்பிரிவு செய்தும், பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகளை தனித்தனி உட்பிரிவாக நகராட்சி ஆணையர் பெயரில் மாற்றம் செய்யப்பட்டு, அதற்கான வட்டாட்சியரின் உத்தரவு நகல்களையும் சமர்பித்துள்ளார். மேலும், மனைப்பிரிவு அனுமதி வழங்குவதற்கான கட்டணங்கள் அனைத்தையும் நகராட்சி கருவூலத்தில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் விபரங்களின் அடிப்படையிலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலின் பேரிலும், மொடச்சூர் கிராமம், வார்டு C , பிளாக் 15 , நகரளவை எண்.17/2, ரீ.சர்வே எண். 69A, 71B இல் அமையும் 0.4665 ஏக்கர் காலியிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மா.வ/ஈ.மா எண்.97/2022 என எண்ணிடப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் வழங்கப்பட்ட 1 முதல் 20 நிபந்தனைகளும் மற்றும் 1 முதல் 5 சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.266/2022/எப்1)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.765**

27. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குப்பட்ட மொடச்சூர் கிராமம், வார்டு C , பிளாக் 20 , நகரளவை எண்.7/2, புல எண்.7/2 இல் அமையும் 2675 சதுர மீட்டர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவாக அமைக்க இணையவழி எண்.ERD/S9CAK7GD/2022/TCP நாள்.11.03.2023 இன் வாயிலாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் ஒப்புதல் அளித்து வரைபடம் வரப்பெற்றது. மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சிக்கும் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும் எனவும், மேற்காணும் மனைப்பிரிவில் சாலைகள், குடிநீர் விநியோக குழாய் பதித்தல், தெருவிளக்கு, மின் கம்பங்கள் அமைத்தல் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும் என திரு.ஆர்.எஸ்.வேலு, திரு.வி.டி.செந்தில்மோகன், திரு.எம்.பி.பழனிச்சாமி மற்றும் திரு.கே.சுரேஷ் ஆகியோருக்கு 20.03.2023 இல் அறிவிப்பு அனுப்பப்பட்டது.

இந்நிலையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் மனைப்பிரிவு திட்ட அனுமதி ந.க.எண். ERD/S9CAK7GD/2022/TCP நாள்.08.05.2023 இல் மனைப்பிரிவு வரைபட அனுமதி எண்.SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO.180/2023 என எண்ணிடப்பட்டு

மேற்படி மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்படி இடத்தினை பொறியியர் பிரிவினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு 23.01.2024 இல் சான்றளிக்கப்பட்டுள்ளது.

1. அங்கீரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறு சாலைகளின் இருபுறம் (using 20mm Blue metal)( M20 concrete) தடுப்பு சுவர் அமைத்து அதன் மழை நீர் செல்லும் பாதையில் எவ்விதத்திலும் மழை நீர் தேங்காதவாறு உட்புறத்தில் சிமெண்ட பூச்சு செய்து (Disposal Point) உடன் மழை நீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.

2. அங்கீரிக்கப்பட்ட வரைப்படத்தில் உள்ள சாலை அமைப்பின் படி 10.00 மீ அகல தென்வடல் ரோடு மண் நிரப்பி GSB 20 Cm & WMM 15Cm) அமைத்து DBM 5 Cm மற்றும் BC 3 Cm அமைத்து போடப்பட்ட சாலையில் மழைநீர் வடிகால் வரை (End to End) தார்சாலை அமைக்கப்பட்டு நகராட்சி சாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

3. அங்கீரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறு சாலைகளில் 110 m HDPE Pipe தரமான குடிநீர் குழாய் பதிக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது

4. நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்திற்கு பாதுகாப்பு முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

5. வரைபடத்தில் உள்ளவாறு மின் கம்பங்கள் அமைத்து தெரு விளக்குகள் அமைக்க மின் வாரியத்திற்கு தொகை செலுத்தப்பட்டு மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளது. LED விளக்குகள் மட்டும் பொருத்தப்பட வேண்டும்.

6. மேலும் இப்பணிக்கு ஈரோடு அரசு பொறியியல் கல்லூரி அவர்களின் கடிதம் IRTT/CE35/2023-2024/Test No.51/873 நாள்.18.12.2023 இன் படி முன்றாம் நபர் தரச்சான்று பெறப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு பொறியியர் பிரிவில் சான்றளிக்ப்பட்டதில் மேற்படி மனைப்பிரிவு இடத்தில் பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடத்தில் முள் வேலி அமைத்து நகராட்சிக்கு சொந்தமான இடம் என பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் மேற்படி மனைப்பிரிவில் பிரிக்கப்பட்ட மனையிடங்கள் அனைத்திற்கும் தனித்தனியாக உட்பிரிவும் மற்றும் நகராட்சி ஆணையர் பெயரில் சாலை, பொது ஒதுக்கீடு நிலங்களை தனி உட்பிரிவும் செய்தும் அதற்கான வட்டாட்சியரின் உத்தரவு நகல்களையும் சமர்பித்துள்ளார். மேலும், மனைப்பிரிவு அனுமதி வழங்குவதற்கான கட்டணங்கள் அனைத்தையும் நகராட்சி கருவூலத்தில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் விபரங்களின் அடிப்படையிலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலின் பேரிலும், மொடச்சூர் கிராமம், வார்டு – C , பிளாக் 20 , நகரளவை எண்.7/2, புல எண்.7/2 இல் அமையும் 2675 சதுர மீட்டர் காலியிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO.180/2023 என எண்ணிடப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் வழங்கப்பட்ட நிபந்தணைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.623/2023/எப்1)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.766**

28. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு – B, வீரபாண்டி கிராமம், பிளாக்–23, T.S.No.55/1பி, இல் 1531 சதுர மீட்டர் காலியிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க சாலை மற்றும் பொது ஒதுக்கீடு வரைபடம் ஒப்புதல் அளித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் இணையதள கடிதம் ERD/29OLWRM3/2022TCP நாள்.24.03.2023 இல் மேற்படி பொது ஒதுக்கீடுகளை தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. இதன்படி மனுதாரர் திரு. ஜி.ஜட்சன் என்பவர் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சிக்கும் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் ஆவண எண்.1367 நாள்.21.04.2023 மற்றும் 1368 நாள்.21.04.2023 இல் நெ.1 இணை சார்பதிவாளர் கோபிசெட்டிபாளையம் அவர்களால் பதிவு செய்யப்பட்டு அதன் அசல் மற்றும் நகல்கள் மனுதாரரால் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மேற்படி மனைப்பிரிவில் சாலை அமைத்தல், குடிநீர் விநியோக குழாய் பதித்தல், மழைநீர் நீர் வடிகால் அமைத்தல், மின் கம்பம் நட்டு தெருவிளக்கு பொருத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள கோரி மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளை மேற்கொண்டு 23.11.2023 ஆம் நாளிட்ட பொறியியர் குறிப்பில் மேற்படி மனைப்பிரிவில் மழைநீர் வடிகால் Disposal Point உடன் மழைநீர் தேங்காதவாறு உட்புறத்தில் சிமெண்ட் பூச்சு செய்து அமைக்கப்பட்டுள்ளது என்றும் இச்சாலையானது நகராட்சி சாலையுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி மனைப்பிரிவில் 110M HDPE PIPE தரமான குடிநீர் குழாய் பதிக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது என்றும் வரைபடத்தில் உள்ளவாறு மின் கம்பங்கள் அமைத்து தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு மின் கம்பங்கள் நடப்பட்டு LED தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்காணும் பணிகளுக்கு ஈரோடு அரசு பொறியியல் கல்லூரி அவர்கள் கடிதம் IRTT–CE35/2023–24/Test No 36/800 dt 23.11.2023 இன் படி மூன்றாம் நபர் தரச்சான்று பெறப்பட்டுள்ளது என்றும் மேற்காணும் பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்கள் திட்ட அனுமதி எண்.ERD/290LWRM3/2022/TCP நாள் 09.05.2023 (இந்நகராட்சிக்கு வரப்பெற்றது 19.12.2023) இன் படி மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மனைப்பிரிவில் உள்ள இடத்தில் கம்பிவேலி அமைக்கப்பட்டு இந்த இடம் நகராட்சிக்கு சொந்தமான இடம் என விளம்பர பலகை வைக்கப்பட்டு அதன் புகைப்பட நகலுடன் மனுதாரரால் சமர்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள 7 மனையிடங்களுக்கும் மனைப்பிரிவு உரிமையாளர் பெயரில் தனித்தனியாக வட்டாட்சியர் மூலம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளுக்கான இடங்களை ஆணையர் பெயரில் உட்பிரிவு செய்து வட்டாட்சியரால் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும். மேற்படி மனைப்பிரிவிற்கான அனைத்து கட்டணங்களும் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் விபரங்களின் அடிப்படையிலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலின் பேரிலும், வார்டு – B, வீரபாண்டி கிராமம், பிளாக்–23, T.S.No.55/1பி, இல் 1531 சதுர மீட்டர் காலியிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO.185/2023 என எண்ணிடப்பட்டும், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கு

உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.735/2023/எப்1)

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.767**

29. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–D, பிளாக் – 17, நகரளவை எண்.212/2A, PMK ரைஸ் மில் வீதியில் உள்ள மனுதாரரின் மனையிடத்தில் மூன்றடி அகலம் 52 அடி நீளத்தில் மனை நிலத்தினை வடிகால் வசதிகள் செய்ய நகராட்சிக்கு தானமாக கொடுப்பதாக மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் 26.12.2023 இல் நடைபெற்ற போது விண்ணப்ப எண்.6911277 இல் அனுமதி வழங்குமாறு திரு.K.E.கந்தசாமி அவர்கள் விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி இடத்தினை நகர சார் ஆய்வாளர் ஆய்வு செய்து அதில் வார்டு–D, பிளாக் – 17, நகரளவை எண்.212/2A இடத்தினை அளவீடு செய்து கிழமேல் வடபுறம் 54' –3" அடியும் கிழமேல் தென்புறம் 55' – 9" எனவும், தென்வடல் இருபுறமும் 3' – 0" அடி என 183 சதுரடி பூமியை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய புலப்படத்துடன் அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தேவைப்படுவதால் இந்நிலத்தினை தானமாக பெற நகர்மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2692/2023/எப்1)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.768**

30. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிக்கு குடிநீர் விநியோகம் தலைமை நீரேற்று நிலையம் மூலம் வழங்கப்படுகிறது. அங்கு ராவாட்டர், மின் மோட்டார் 120 HP மற்றும் கிளியர் வாட்டர் மின் மோட்டார் 180 HP இயக்கப்படுகிறது. ராவாட்டர் ஆற்று தண்ணீர் சுத்தம் செய்வதற்கு 6 எண்ணிக்கையில் பில்டர் மீடியா உள்ளது. சுத்தம் செய்த குடிநீரை Chemical முறையில் சுத்திகரிப்பு செய்வதற்கு குளோரின் பிளாண்ட் 2 எண்ணிக்கை உள்ளது.

Chemical Liquid gas சிலிண்டர் மூலம் பொருத்தப்பட்டு Pre Chlorination மற்றும் Post Chlorination முறையில் குடிநீர் கலந்து நகர் பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு தினம் பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.20 நாட்கள் வீதம் 2 சிலண்டர்கள் தேவைப்படுகிறது. 2024–25 ஆம் ஆண்டு 6 மாத காலத்திற்கு குளோரின் கேஸ் சிலிண்டர் வாங்குவதற்கு மதிப்பீடு ரூ.4.75 இலட்சம் ஆகும். இதனை திருவாளர்.ஸ்ரீநிகேதா எண்டர்பிரைசஸ் நடுபாளையம் , சித்தோடு அவர்கள் வழங்கி கொண்டு உள்ளார், அவர் முன்பு கொடுக்கப்பட்ட அதே விலைப்புள்ளிக்கு குளோரின் சிலிண்டர் விநியோகம் செய்ய (6 மாத காலத்திற்கு) ஒப்பு கொண்டதால் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.673/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.769**

31. 057/CP/23–24/0004291 மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனு எண். TN/MAWS/ERD/D/MMC/26SEC123/6917785 நாள்.26.12.2023, வார்டு எண். 15 வாஸ்து நகர் சரவணா தியேட்டர் வீதியில் மூன்று கம்பங்களுக்கு லைன் அமைத்து லைட் பொருத்த

| | |
|---|---|
| புதிய தெரு விளக்கு மற்றும் உதிரிபாகங்கள் | ரூ.13500/- |
| தமிழ்நாடு மின்சார வாரிய பதிவு கட்டணம் | ரூ.4000/- |
| தமிழ்நாடு மின்சார வாரிய கட்டணம் | ரூ.13500/- |
| மொத்தம் | ரூ.31000/- |

கட்டணம் ரூ.31,000 ஆகும். இப்பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வருவாய் நிதியின் கீழ் பணி மேற்கொள்ளலாம்.

2. 057/CP/23-24/0004590 மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனு எண்.TN/MAWS/ERD/MMC/04 Jan 24/7288086 அன்பு நகர் 2 வது வீதி , மொடச்சூர் வீதி கம்பத்தில் லைட் பொருத்த

| | |
|---|---|
| புதிய தெரு விளக்கு மற்றும் உதிரிபாகங்கள் | ரூ.4500/- |
| தமிழ்நாடு மின்சார வாரிய பதிவு கட்டணம் | ரூ.4000/- |
| தமிழ்நாடு மின்சார வாரிய கட்டணம் | ரூ.1000/- |
| மொத்தம் | ரூ.9500/- |

கட்டணம் ரூ.9500/- ஆகும். இப்பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வருவாய் நிதியின் கீழ் பணி மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1ல் – 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது**
**அலுவலக குறிப்பு 2 இல் – 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.770**

(ஒப்பம்)– என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி